Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# ஊத்துக்காடு வெங்கடகவியின் கவிதைகளில் அழகியலும் கருத்தமைவும்

**கௌசல்யா.செ & ஸ்ரீமதி . நாகேஸ்வரி**
**தென்திருவிதாங்கூர்இந்துக்கல்லூரி**
**நாகர்கோவில்**
**கன்னியாகுமரிமாவட்டம்**

**கட்டுரைச்சுருக்கம்:**

ஊத்துக்காடு வெங்கடகவியின் வாழ்க்கைக்குறிப்புடன் அவர்தம் கவிதைகளில் இடம்பெற்ற புராணக்கதைக்குறிப்புகள் , தத்துவங்கள்,பக்தி,கவிதைநடை, அழகியல் ஆகியன கட்டுரையின் கருத்தாக்கமாக அமைகின்றன. இடையிடையே சிற்சில கருத்தும் இணைத்துகட்டுரைவடிவமைக்கப்பட்டுள்ளது.

**முன்னுரை:**

**வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்**

என்னும் வள்ளுவன் வான்மறைக்கு இணங்க இவ்வையத்துள் வாழ்ந்த மாமனிதர்கள்பலருள் ஊத்துக்காடு வெங்கடகவியும் ஒருவர் . அவர்தம் கவிதைகளில்இடம்பெற்றகருத்தமைவையும்அழகியலையும் இக்கட்டுரை விளக்கமுற்படுகிறது.

**பிறப்பும்வாழ்வும்:**

**'தோன்றிற்புகழொடுதோன்றுக'**என்றதுபொய்யாமொழி.

.அங்ஙனம் திருவாரூர் மாவட்டத்தின் மன்னார்குடியில் ராமச்சந்திரவாதுளருக்கும் கமலநாராயணிக்கும் மகனாகப்பிறந்தார்,நம்வெங்கடகவி.நடேசரத்னபாகவதரிடம் அடிப்படை இசையைக் கற்றுக்கொண்டு அன்னையின் வாக்குப்படி இறைவன் கண்ணனையே தம் மானசீக குருவாக ஏற்றுக் கொண்டிருக்கிறார் .பாடல்களைப்புனைந்து பக்திமழையிலும் இசைச்சாரலிலும் நனையத்தொடங்கினார்.

**தமிழ்ப்புலமையும்இசையறிவும்:**

பக்தியுடன்நிறைந்தபரவசம்,இறைவனை அழகுற வருணிக்கத் தூண்டிட , அவர்பெற்ற இசையறிவும் வழிநடத்த , பேரெழில் கவிதைகளை இயற்றினார் . அவர்சிந்தையில் நிறைந்த கண்ணனைக் கவிமலர் சூட்டி அழகுபார்த்தார்.

**'இங்கிதம் என்றாலே என்னவிலை என்று**

**கேட்பானாடி அந்த கண்ணன்'**

என்றவரிகளில் வஞ்சப்புகழ்ச்சியாய் இறைவனைப் போற்றும்

புலமை உயர்ந்தது . கவிதைகளுக்கு ராகமும் தாளமும் அமைத்துத் தந்திருக்கும் அவரது இசையறிவு இமயம் என்றால் மிகையில்லை.

காவடிச்சிந்து முதல் சங்கராபரணம் வரை இவர் பாடாத ராகங்களே இல்லை எனலாம். காப்பிராகத்திலான ,

**'என்ன தவம் செய்தனைய சோதா'** ….. என்னும் பாடல் வெங்கடகவியின் மணிமகுடம் எனலாம்.

**புராணக்கதைபொதிவு:**

கதைபொதிபாடல்கள் காலம் கடந்து நிற்கும் என்னும் கருத்திற்கிணங்க தம் அழகு தமிழ்க்கவிதைகளில் கதைப்பொதிவினையும் இசைநுணுக்கத்தினையும் தந்து காலம் கடந்தும்இசையால் வாழ்கிறார்.

**'தோலை அரிந்து கனி தூர எறிந்து வெறும்**

**தோலைத் துணிந் தொருவன் தந்தானல்லவோ'**

என்னும்வரிகளில் விதுரரின்பக்தியால் பழத்தோலை அமுதமாய் உண்ட பாரதக்கதைபுலப்படுகிறது.

**'மேலைப்பிடி அவலை வேண்டு மென்றே தெரிந்து**

**விரும்பி ஒருவன் அன்று தந்தானல்ல வோ'**

என்னும்வரிகளில் கண்ணன் குசேலன் நட்பு சொல்லப்படுகிறது.

**'காலமெல்லாம் தவமிருந்து கனிந்த கனி கடித்துச் சுவைத்தொருவள்**

**தந்தாளல்லவோ'**

என்னும்வார்த்தைகள் ராமாவதாரத்தில் சபரியின் விருந்தோம்பலைச் சொல்கின்றன.

**கவிதையில் தத்துவங்கள்:**

வாழ்க்கைநிரந்தரமில்லாதது; வாழும்நாளில் இறைச்சிந்தனையுடன் கூடிய நிமிடங்களே உண்மையானவை; உன்னதமானவை என்பன போன்ற தத்துவங்களை வெங்கடகவியின் கவிதைகளில் காணலாம்.

**'சன காதியர்தவ யோகம் செய்து சாதித்ததைப்**

**புனிதமாய் எளிதில் பெற என்ன தவம் செய்தனை'**

என்றவரிகளில் யோகம்முதலான சாதனைகளைவிட அன்பே ; உருகும் பக்தியே இறைவனை அடைய எளியவழி என்று யசோதையின் வாழ்வின் வழிநின்று விளக்குகிறார்.

கண்ணனைச் சிந்தித்தால் மனம் விலாசமாகும்;புத்தியில் தெளிவுதோன்றும் என்பதனை

**'தெளிந்த நிலவு பட்டபகல் போல் தெரியுதே**

**திக்கை நோக்கி என் இருபுருவமும் நெரியுதே'**

என்னும்வரிகளால்உணர்த்துகிறார்.

**கவி நடையும் பக்தி யோகமும்:**

**நம்பிக்கை நம்பிக்கை நம்மிடத்தில் நம்பிக்கை**

**நம்பிக்கை இறைவனிடத்தில் நம்பிக்கை -சுவாமிவிவேகானந்தர்.**

கர்ம,ஞான,பக்தியோகங்களில் வெங்கடகவி பக்தியோகம் வழிநின்று இறைவனின்மீது ஆனந்தவெள்ளமாய் பக்திக்கவி பொழிந்து மகிழ்ந்தமையை அவர்தம் கவிதைகள் வழி அறிகிறோம்.

**'ஆனந்த மோகனவேணு கானமதில் அலைபாயுதே'**

என்றுகிருஷ்ணப்ரேமையைவெளிப்படுத்துகிறார்.

**'பாலனென்று வாரி அணைத்தேன்**

**அணைத்த என்னை மாலையிட்டவன் போல்**

**வாயில் முத்தமிட்டாண்டி'**என்று சிருங்காரபாவம் காட்டுகிறார்.

பின்னாளில் பாரதி கண்ணனைக்காதலியாய்க் கொண்டதும் இதை கேட்டுத்தானோ!

'**செய்யும் துஷ்டத்தனத்திற்கோர் எல்லையே இல்லை**

**தேடிப்பிடிக்க என்றால் சக்தியும் இல்லை**'

என்று யசோதையாய்த் தான் மாறி பக்தி யோகத்தினை வெளிப்படுத்தும் பாங்கு அற்புதம்.

**கண்ணனேகதி என்னும் வெளிப்படை:**

**'சகலம் கிருஷ்ணார்ப்பணம்'**

என்று வெங்கடகவிவாழ்ந்திருக்கவேண்டும்.அதனால்தான் கண்ணனைப் போற்றித் துதித்து ; அனுபவித்து; பக்திசெய்து; அன்புகாட்டி; ஆனந்தித்துப் பாடல்கள் புனைந்திருக்கிறார்.

**'சின்னஞ்சிறு பதங்கள் சிலம்பொலித்திடுமே**

**செவிமடுத்த பிறவிமனம் களித்திடுமே'**

என்று திருவடிதீட்சையும் அதனால் ஆனந்தித்த பேரானந்த அனுபவமும்கவிதையாய் வெளிப்பட்டன.யசோதைக்குக்கிடைத்த வாய்ப்பினைச் சிலாகித்துப் போற்றுவதில் நின்னைச்சரணடைந்தேன்என்றுகண்ணனைச்சரணடைந்ததை

**'எங்கும் நிறைப் பரப்பிரம்மம் அம்மா**

**என்றழைக்க என்னதவம் செய்தனை'**

என்னும் வரிகளால் உணரமுடிகிறது.

**சர்வசமய சிந்தனை:**

**'அரியும் சிவனும் ஒண்ணு அறியாதார் வாயில் மண்ணு'**எனும் முதுசொல் ஒன்று பரம்பொருள் எனும் தத்துவத்தினை உணர்த்துகிறது. வெங்கடகவியும் அரியுடன் அரனையும்

**'உன்னிலும் எனக்கொரு உற்றார் யாருமுண்டோ ஒளிமுதல் செல்வமே**

**உள்ளும் புறமும் நிறைவான துன்னருளே உத்தமமான**

**மறைதரு பொருளே''**

என்று பாடி மகிழ்ந்திருக்கிறார்.விநாயகருக்கும் முருகனுக்கும் கவிபுனைந்து மகிழ்ந்தவரவர்.பக்திக்குப் பரம் ஒன்றன்றோ!

**முடிவுரை**

இங்ஙனம் வெங்கடகவியின் வெகுசில கவிதைகளில் அமைந்த அழகியலும் கருத்தமைவும் சுருக்கமாக விளக்கியுரைக்கப் பெற்றன.

**மேற்கோள்நூல்கள் :**

பாரதியார்கவிதைகள்

திருக்குறள்

ஸ்ரீகிருஷ்ணகானம்

விக்கிபீடியா.